சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.04.12.2023

OS.No.151/2020

PW1: சுகுமாரன் (வயது 46 ) த/பெ.கணேசன்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை (1, 2 பிரதிவாதிகள் தரப்பில்)**

எனது தாத்தாவின் பெயர் வடமலை என்ற நடேச உடையார் என்றால் சரிதான். அவரின் மூத்த மகன் பெயர் கணேசன். அதை தவிர்த்து 2 மகன்கள் சுப்ரமணியன் என்கிற குணசேகரன், நடராஜன் ஆவார்கள். எனது தாத்தா இறந்து போன வருடம் என்ன என்றால் 1982. தாவா சொத்துகள் அல்லாமல் மனை, தோட்டம் உள்பட மொத்தம் 20 ஏக்கர் நிலம் உள்ளது. எனது தாத்தா உயிருடன் இருக்கும்போதே சொத்துக்கள் எதுவும் பாகம் பிரிந்ததா என்றால் பாகம் பிரியவில்லை. 1987 ஆம் வருடம் எனது தாத்தா சொத்துகள் எல்லாம் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். வாய்கரராக அந்த பாகம் பிரிக்கப்பட்டது. எனது அப்பாவிற்கு அதன் மூலம் சுமார் 4 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. தாவா சொத்துக்கள் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட பாகம் என்பது தான் எனது கட்சி என்றால் சரிதான். எனது அப்பா இருக்கிறார். எனது அப்பா ஏன் வழக்கு போடவில்லை என்றால் எனது அப்பா இருதய நோயாளி அதனால் வழக்கு போடவில்லை. இந்த வழக்கில் எனது அப்பா தரப்பினர் இல்லை என்றால் சரிதான். எனது அப்பா உயிருடன் இருக்கும் பட்சத்தில் தாவா சொத்து எனக்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்று கேட்கமுடியுமா என்றால் முடியும். 1987 ல் பாகம் பிரிக்கப்பட்டபோது எனக்கு விவரம் தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா தனக்கு பாகமாக வந்த சொத்து என்று சொன்னதை வைத்து தான் நான் இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது

குடும்பத்தாரின் அனுபவத்தில் இருக்கிறது என்று காட்ட எழுத்து பூர்வமான ஆவணம் இருக்கிறதா என்றால் எனது அப்பா பெயரில் பட்டா இருக்கிறது. வழக்கிற்கு பின்னிட்டு தான் எனது அப்பா பெயரில் பட்டா வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பட்டாவை பெறுவதற்கு என்னென்ன ஆவணங்களை தாக்கல் செய்தேன் என்றால் எனது தாத்தாவின் இறப்பு சான்றிதழ், 1926 ஆம் வருடத்திய ரி-செட்டில்மெண்ட் ஆவணம், அதன்பிறகு எனது தாத்தா வாரிசு சான்று, அதன் பிறகு எனது அப்பா வாரிசு சான்று, 1987 ஆம் ஆண்டு ஏ- ரிஜிஸ்டரில் எனது அப்பா பெயர் உள்ள ஆவணம் ஆகிவற்றை தாக்கல் செய்தேன். மேற்படி ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் இல்லை, அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்ய தயராக உள்ளேன். தாவா 1 வது அயிட்டத்தின் நான்கெல்லைகள் வடக்கே வா.சுப்பிரமணியன் என்கிற குணசேகரன், தெற்கே எனது அப்பா பெயர் உள்ள சொத்து, மேற்கில் எங்கள் பூர்வீக சொத்து உள்ளது, கிழக்கே சொத்து சரியாக தெரியவில்லை. தாவா 2 வது அயிட்ட சொத்துக்கும் மேற்படி அதே நான்கெல்லைகள் தான். தாவா 3 வது அயிட்ட சொத்துக்கு வடபுறம் எங்கள் பூர்வீக சொத்து மற்ற 3 புரம் எனக்கு சரியாக தெரியவில்லை. 1 வது அயிட்டம், 2 வது அயிட்டம் நஞ்சை. 3 வது அயிட்டம் குட்டையாக உள்ளது. தாவா சொத்துக்களை சுவாதினம் செய்ததற்கு அடையாளமாக வாய்தா கட்டியுள்ளீர்களா என்றால் முன்னாடி கட்டியுள்ளோம். தாவா சொத்தில் என்ன சாகுபடி செய்துள்ளேளாம் என்றால் தாவா 1 வது அயிட்ட சொத்தில் நெல் சாகுபடி, 2 வது அயிட்டத்தில் நெல் சாகுபடியும், 3 வது அயிட்டத்தில் சாகுபடி இல்லை. மேற்படி நெல் சாகுபடி எல்லாம் எனது முன்னோர்களான எனது தாத்தா, அப்பா காலத்தில் செய்தார்கள். நான் எதுவும் சாகுபடி செய்யவில்லை. 1 ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்பனை செய்தது எனது சித்தப்பா சுப்பிரமணியன் என்கிற குணசேகரன்.1 ஆம் பிரதிவாதி எனக்கு சொந்தமா என்றால் சொந்தம் இல்லை. 1 ஆம் பிரதிவாதி மற்றும் என் அப்பா ஆகிய அனைவருமே வெங்கடாசலபுரம் கிராமத்தை பூர்வீகமாக கொண்டவர்கள் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி வருவாய் ஆவணங்களை அவருக்கு ஆதரவாக திருத்தம் செய்து கொண்டதாக

கூறுவது என்னவென்றால் கணேசன் பெயரில் உள்ள இடத்தை குணசேகரன் என்பவரிடம் கையெழுத்து வாங்கி தனக்கு சாதகமாக பத்திர பதிவு செய்துள்ளார். 26.05.2006 ல் 1 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய பத்திரத்தை பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் 2019 ஆம் ஆண்டில் தான் தெரியும். அந்த நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் அதை பற்றி தெரிந்துகொண்டேன். வா.சா.ஆ.2 ஆவணத்தை பற்றி எப்படி தெரியும் என்றால் 2019 ஆம் ஆண்டில் தான் தெரியும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களை பற்றி 2019 ல் தான் தெரிந்து கொண்டேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

(வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது)

/signed/
சுகுமாரன்

/signed/

Thiru.S.Vijayakumar.M.A.M.L.,
Sub Judge, Lalgudi